திறமையை வளர்த்துக் கொள்வது எப்படி?

ஒவ்வொரு மனிதனுக்கும் திறமை இன்றியமையாதது. நாம் அனைவரும் வெவ்வேறு துறைகளில் ஈடுபட்டிருப்பினும், நம் அனைவருக்கும் பொதுவாக இருந்து துணை புரிவது திறமை. திறமை இல்லாதவனின் வாழ்வில் நிம்மதி இருப்பது கடினம். ஆடை இல்லாதவன் அரை மனிதன்' என்பது பழமொழி. ஆனால் திறமை இல்லாத மனிதன் அரை மனிதன்' என்று இப்போது கூறலாம். வேறு எத்தனை குணங்கள், வசதிகள் அமைந்திருப்பினும், திறமையற்ற ஒருவன், வாழ்வில் வெற்றி பெறுவது கடினம்.

உற்பத்தியைப் பெருக்குவதில் அக்கறையின்மை; திறமையும் விசுவாசமும் அற்ற நிலைமை; நூற்றுக்கணக்கான போராட்டங்களும் ஊர்வலங்களும் தாமதித்து வேலை செய்தலும் ஆகிய பிற விரும்பத்தகாத நிலைமைகளும் நிரம்பிய இந்நாளில், இந்தப் புத்தகமானது, கடின உழைப்பு, வேலையில் நாட்டம், தனது தொழில் வெற்றியில் அக்கறை காட்டுவது ஆகியவற்றைச் சிபாரிசு செய்வதோடு வழியும் காட்டுகிறது. திறமை என்பது யாது என்பதை விவரித்து அதைப் பல கோணங்களில் ஆராய்ந்து, விஞ்ஞான ரீதியிலும், நடைமுறையிலும் திறமையை ஒருவர் எவ்வாறு பெறலாம் என்றும் இப்புத்தகம் உரைக்கிறது.

வேகத்துடன் கச்சிதமாக முயன்று, சுய அறிவைக் கொண்டு முன்னேறுவது எப்படி என்பதை ஒவ்வொருவரும் முதலில் திடப்படுத்திக் கொள்ளவேண்டும்.

திறமை என்பதைச் சுருக்கமாகக் கூறப்போனால், நம்மிடம் உள்ள சிறிய வசதிகளை வைத்துக்கொண்டு, அதிகபட்ச வெற்றிகளைக் குவிப்பதாகும்.

ஒரு காரியத்தை நல்ல முறையிலும் செய்யலாம்; பழுதான முறையிலும் செய்யலாம். தொழில் முன்னேற்றம் மிகுந்த இந்நாள்களில் எது சிறந்த முறை, எது பழுதுள்ள முறை என்பதை விஞ்ஞான ரீதியிலும் பரீட்சார்த்த முறையிலும் கூறுவது மிக எளிது. நாம் கவனிக்க வேண்டுவது என்னவெனில் மிக நல்ல முறையில் பணியாற்றி வெற்றிபெறுவதை எவரும் முயன்று, கற்று, நடைமுறையில் சாதிக்கலாம் என்பதே.

வேலையின் தத்துவம்

'வேலை' என்பது சிருஷ்டியின் அடிப்படைச் சட்டம் என்றே கூறலாம். கடின உழைப்பு மனிதனின் நல்வாழ்வுக்கு மிக அவசியம். நாம் வேலை செய்யாவிடில், அனைவரும் பட்டினியாலும், தாகத்தாலும், குளிராலும், காற்றாலும், வெறுப்பினாலும், தனிமையின் பயங்கரத்தினாலும் தொல்லைப்பட நேரிடும்.

கஷ்டப்படாவிடில், உணவும், இருக்க இடமும், போக்குவரத்து வசதி, செய்தி சேகரிக்கும் வசதி ஆகியனவும் மற்றபடி வாழ்க்கைக்கு அவசியம் என்று கருதப்படும் அடிப்படை வசதிகளும் நமக்குக் கிடைக்கா.

ஒவ்வொரு தனி மனிதனும் தன் ஒத்துழைப்பையும் தன் பங்கையும் தராவிட்டால் நாகரிகம் என்பது நடைமுறையில் நாம் பார்க்க முடியாத ஒன்றாகிவிடும்.

நம் மூதாதையர்கள் விட்டுச் சென்றிருக்கும் அனுபவ அறிவை, கடின உழைப்பால் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

பழைமையான கருத்துகள் மறைந்துவிட்டால், நாம் மீண்டும் முதலிலிருந்து புதிதாக அனைத்தையும் கற்க வேண்டிவரும். அநேகரது வாழ்க்கை மிகக் கடினமான ஒன்றாக ஆகிவிடும்.

எடிசன் என்னும் விஞ்ஞானி என்ன கூறுகிறார் தெரியுமா! "ஒரு மனிதனின் அறிவுத்திறனானது ஒரு சதவிகிதம் சிந்தனையாலும், தொண்ணூற்றொன்பது சதவிகிதம் வியர்வையினாலும் அடையப் பெறுகிறது."

வேறோர் அறிஞர் கூறுவது:

"உலகம் உழைப்பை விரும்புகிறது. வெறுமனே வாழ்வதற்குக்கூட வேலை தேவைப்படுகிறது என்பது நாம் அறிந்த உண்மை. நாகரிகத்தின் ஒரு நிலையை ஸ்திரமாக வைத்துக்கொள்ள மட்டுமின்றி, எதிர்கால வாழ்வில் நம் சந்ததியினருக்கு நல்ல சந்தர்ப்பங்களை ஏற்படுத்தவும் உழைப்பது மிக அவசியம்.

மகிழ்ச்சியும் ஆரோக்கியமும்

மனித உடலை ஓர் இயந்திரமாக வைத்துக் கொண்டால், வேலை என்பது அதைக் கட்டுப்படுத்தும் 'சரிமானி' (Regulator) என்று கூறலாம். வேலை இல்லாவிடில் இந்த இயந்திரம் பழுதடைந்துவிடும்.

இயற்கையின் விதி இதுதான்.

நடவடிக்கை இல்லாவிட்டால், எதுவுமே அழியத் தொடங்கும். எந்த விஞ்ஞான விதி பயன்படுத்தப்படாமல் இருக்கிறதோ, அதுவும் மறைந்துவிடும். இயற்கை, நாம் எதை எதுவரை பயன்படுத்துகிறோமோ, அதுவரை, அதை நமக்குக் கிடைக்கச் செய்கிறது.

உதாரணமாக, ஓய்வு பெற்ற ஊழியர்கள் அநேகம் பேரைப் பார்த்திருப்பீர்கள்.

அவர்கள், வேலையற்ற நிலையில் எதையோ இழந்ததுபோல், அவர்கள் வாழ்வு, உடல் நலமும் உற்சாகமும் இன்றி, சுருங்கிப்போவதைக் காணலாம்.

நல்ல, முறையான, கௌரவமான வேலையே உடலுக்கும் உள்ளத்திற்கும் சமநிலையை அளிக்கிறது. உழைப்பு என்பது உடலுக்கும் உள்ளத்திற்கும் இயற்கையால் அளிக்கப்பட்ட டானிக் ஆகும்.

வேலையற்ற வாழ்க்கை என்பது முடிந்த காரியமானாலும், அர்த்தமற்றது. வாழ்க்கையில் அர்த்தம் இருக்க வேண்டுமாயின் கடின உழைப்பு தேவை. இதை, சந்தோஷத்தின் அடிப்படை; அறிவின் அடிப்படை; கச்சிதமான தன்மையின் அடிப்படை என்றே கூறலாம்.

அன்றாட வாழ்க்கையின் தேவைகளுக்கு மட்டுமன்றி நம்முடைய முடிவான நோக்கிற்கும் (Goal) உழைப்புமிக அவசியமாகும். வேலையின் மூலந்தான் ஒவ்வொரு மனித வாழ்க்கையும் நிறைவெய்தும். உடலின் ஆரோக்கியத்திற்கும் உள்ளத்தின் மலர்ச்சிக்கும் கடின உழைப்பு உதவி செய்கிறது. சந்தோஷ வாழ்விற்கு, கடின உழைப்பும் ஒரு வழியாகும்.

நாம் எவ்வளவு மூலதனம் போடுகிறோமோ, அவ்வளவுதான் நாம் திரும்பப் பெற முடியும். சட்டியில் இருப்பதுதான் அகப்பையில் வரும். இதைப் பொது அறிவின் மூலம் உணர வேண்டும். பேரறிஞர் ரஸ்கின் கூறுவதுபோல் –

"மனிதனே! உனக்கு ஆழ்ந்த அறிவு வேண்டுமாயின், கடினமாக உழைக்க வேண்டும்.

"உணவு வேண்டுமென்றால் கஷ்டப்பட வேண்டும்; சந்தோஷம் வேண்டுமென்றால் உழைக்க வேண்டும்; உழைப்புதான் நம் சட்டம்."

முயற்சியின் மூலந்தான் மனிதன் எதையுமே பெற முயலவேண்டும். எதுவுமேயின்றி எல்லாவற்றையும் பெற நினைப்பவன், அவனிடம் இயற்கையாக உள்ள குணங்கள், சுயகௌரவம், இன்னும் மற்ற திறமைகள் ஆகியவற்றைக் கூட இழந்துவிடுவான்.

தொழிலின்மேல் நாட்டம் உள்ளவன் மட்டுமே வெற்றியின் சுகத்தை அனுபவிக்க முடியும். ஆனால், சோம்பேறிகள் நிம்மதியற்ற வாழ்க்கையைத்தான் காண முடியும்.

வாழ்க்கையில் பெருத்த வெற்றிகளைக் குவித்த நாயகர்களின் சரித்திரங்களைப் பார்த்தால், பலதரப்பட்ட கஷ்டமான நிகழ்ச்சிகளை அவர்கள் ஒரு சட்டமாக நினைத்து ஏற்று நடத்தி இருப்பது தெரியவரும். பெருவாழ்விற்கு மட்டுமின்றி, மேதாவிலாசத்திற்கும் கடினமாக உழைக்கும் தன்மை தேவை என்றே கூறலாம்.

சுறுசுறுப்பாக ஏதாவது ஒரு வழியில் ஈடுபடுத்தினால், உடல் நலத்திற்கும் மகிழ்ச்சிக்கும் எதிரிகளான நம் சந்தேகங்கள், பயங்கள், கவலைகள் முதலியவை நம்மை அணுகா. ஆனால், சோம்பல் உள்ளம் பல கெட்ட நினைவுகளால் அவதிப்படும்.

சமூக மனோதத்துவத் தேவைகள்

ஒரு மனிதனின் வேலையே அவனுக்கு மனோதத்துவ ரீதியாகவும், சமூக ரீதியாகவும் திருப்தியை அளிக்கும். பொருளாதாரக் கணக்கில் அவனுக்கு உணவு, உடை மற்ற சௌகரியங்கள் தேவைப்படுகின்றன. ஆனால், சமூகத்தில் அவன் தேவைகள் மிகப்பல.

உதாரணமாக –

வெற்றியில் நாட்டம், ஒரு சாராரை அணுகி இருப்பது, சமூகத்திற்குத் தன் சேவைகள் மிக அவசியம் என நம்புவது, தன்னை ஒரு பெரிய மனிதனாக ஆக்கிக் கொள்ளுவது அல்லது நினைத்துக் கொள்ளுவது, அவனுடன் வேலை செய்யும் சக ஊழியர்களின் மதிப்பையும் அன்பையும் பெறுவது, எல்லாராலும் மதிக்கப்பெற்றுப் பாராட்டப்பெறுவது ஆகியவற்றைக் கூறலாம்.இப்படிப்பட்ட சமூக மனோதத்துவத் தேவைகள் பூர்த்தியாவதிலிருந்துதான், ஒரு மனிதன் எந்த அளவுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறான் என்று கணக்கிட இயலும். இத் தேவைகளைப் பெற, ஒவ்வொருவரும் மற்றவருக்குப் பயன்படும் விதத்தில் உழைக்க வேண்டும்.

மனிதன் ஒரு சமூகப் பிராணி. அவனால் தனித்து வாழ முடியாது. அவன் தன் சேவைகளுக்காகச் சமூகத்தையும் அரசாங்கத்தையும் நாடுகிறான். மற்றவர்களின் பராமரிப்பையும் விரும்புகிறான். அவன் சமூகத்திலிருந்து எவ்வளவு 'பெறுகிறானோ' அந்த அளவிற்குக் 'கொடுக்கவும்' வேண்டும். அப்படி அவன் சமூகத்திற்கு அதன் பங்கைச் செய்யாவிடில், அவன் வியாதிக் கிருமியாகக் கருதப்படுவான்.

இப்படிப்பட்ட கிருமிகள், இயற்கையால் அழிக்கப்படும் அல்லது சமூகத்தினால் ஒதுக்கப்படும்.

உபநிஷத் கூறுகிறது: "சுறுசுறுப்பான இயக்கத்திற்கு மத்தியில் இருந்தால்தான், நூறு ஆண்டுகள் வாழ நீ ஆசைப்படலாம்.

முறையான மனப்பயிற்சியைப்போல உடலின் பல பாகங்களின் இயக்கத்தை எதுவுமே ஊக்குவிப்பதில்லை.

மனிதன் இயங்காமல் இருந்தால் துன்பங்கள் பெருகுவது நிச்சயம். தசைகள் இயங்கினால்தான் அவை உறுதி பெறும். இயக்கம், தசைகளை உறுதி ஆக்குமே தவிர, சேதப்படுத்துவதில்லை. வேலையினால் உடலின் உறுப்புகள் கோளாறுகள் இன்றி இயங்க முடியும். முயற்சிதான் தனி மனிதனின் முன்னேற்றத்திற்கு அடிப்படை. உள்ளமும் உடலும் இயங்கிக் கொண்டே இருப்பதனால் ஆயுட்காலத்தில் குழந்தைப் பருவத்தைவிட, வயதாக ஆக மனிதனுக்குக் கட்டுப்பாடான வாழ்க்கை மிகமிகத் தேவைப்படும்.

ஒரு மனிதனின் அன்றாட வேலைக்குத் தேவையான அளவிற்கு அதிகமாகவே, இயற்கை அவனுக்குச் சக்தியை அளித்திருக்கிறது.

இது ஒரு வரப்பிரசாதமாகும்.

புள்ளிவிவரக் கணக்குப்படி, சராசரியாக ஒரு மனிதன் தனக்குள்ள சக்தியில் பத்தில் ஒரு பங்கைத்தான் செலவு செய்கிறான் என்பதை அறிந்தால் ஆச்சரியப்படுவீர்கள்.

இப்படி அதிகப்படும் மனிதனின் சிருஷ்டி சக்தியானது அவனுக்குக் கலை, விஞ்ஞானம், இலக்கியம், தொழில் நுட்பம் ஆகிய பல துறைகளில் அவன் ஈடுபாட்டைப் பெருக்கி, வெற்றி பெறுவதற்கான ஊக்கத்தை அளிக்கிறது. இந்த அதிகப்படியான சக்தியை முறையாகச் செலவழித்தால்தான் முன்னேற முடியும்.

ஓர் அறிஞர் கூறுகிறார்.

"மக்கிப் போவதைவிடத் தேய்ந்து போவது நல்லது."

உழைப்பைவிட, சோம்பலேதான் மனிதனுக்குத் துன்பங்களைத் தருகிறது. எப்போதும் இயங்கும் உள்ளமே மகிழ்ச்சியுடன் காணப்படும். உபயோகத்தில் இல்லாத ஒரு கட்டடத்தையோ இயந்திரத்தையோ போன்று, மனித மூளையும் பாழ்பட்டுவிடுகிறது. நம் உள்ளத்தைச்

அதிலேயே ஆழ்ந்து போவதற்குக் காரணம், பொறுப்பு புதிய சந்தர்ப்பங்களை உண்டாக்கித் தருவதுடன், வேலையின்மீது ஒரு பற்றையும் ஏற்படுத்துவதுதான். இப்படிப்பட்ட பொறுப்பானவர்கள் கஷ்டங்களை எளிதாகத் தாங்குவதற்குக் கற்றுக்கொள்கின்றனர். அவர்களுக்கு, பொறுப்பு என்பது வேதனையைத் தராது. மாறாக, உடலையும் உள்ளத்தையும் இயக்கும் சக்தியாகும். கடின உழைப்பும், பெரும் பொறுப்புகளும், மனிதனின் வியாதிகளுக்கு எதிரான இன்ஷூரன்ஸ் என்றே கூறலாம்.

உள்ளமானது இயங்கிக்கொண்டே இருப்பதனால் வியாதிகளுக்கு இடமே இருப்பதில்லை. ஆகவே, வேலை ஒரு சாபம் அன்று.

மாற்றம் தேவை

உழைப்பு ஒரு வரமே என்றாலும், எந்த ஒரு மனிதனும் ஏதாவது ஒரு வேலையைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று அர்த்தம் இல்லை. உணவில் எப்படி மாறுதல் தேவையோ அப்படி வேலையிலும் ஒரு மாறுதலும் விதமும் தேவை. ஒரு மனிதன் எவ்வளவு உறுதியும் திறமையும் வாய்ந்தவனாக இருப்பினும், அவன் ஒரே விதமான வேலையை எப்போதும் செய்துகொண்டே இருந்தால் அவன் மூளையானது விரிந்து சுருங்கும் தன்மை, கிரகிக்கும் தன்மை, ஊக்கம் ஆகியவற்றை இழந்து மங்கி ஒய்ந்து விடுகிறது. வேலையிலோ, சூழ்நிலையிலோ ஏற்படும் மாறுதல் ஒரு புதிய கண்ணோட்டம் போல ஒரு மனிதனின் உடலையும் உள்ளத்தையும் ஊக்குவதுபோல் வேறு எதுவும் ஊக்குவதில்லை. இத்தகைய மாற்றத்தைப் பெற ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு பொழுதுபோக்கில் (Hobby) தம்மைத்தாமே ஈடுபடுத்திக் கொள்வது அவசியமாகும்.

இச்சந்தர்ப்பத்தில் இன்னொன்றையும் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். ஓய்வு என்பது மனிதனுக்கு அளிக்கப்பட்ட பரிசாகும். இந்தப் பரிசை நாம் உபயோகிக்கும் முறையில்தான், அது நன்மையாகவோ தீமையாகவோ மாறுவது உள்ளது. தகுந்த முறையில் உழைத்து, தேவையான அளவு கிடைக்கும் ஓய்வு நேரத்தை நல்ல

வேலை என்பது மனிதனின் பொருளாதாரத் தேவைகளுக்கு மட்டுமன்றி, அவனது சமூக, மனோரீதியான தேவைகளுக்கும் அவசியமாகும். ஆகவே, வேலையானது ஒரு மனிதனின் சொந்த, சமூக மகிழ்ச்சிகளுக்குத் திறவுகோல் எனலாம்.

சில மனிதர்கள், உழைப்பை ஒரு சாபமாக எண்ணி ஒதுங்குவதை நாம் பார்க்கிறோம்.

இப்படிப்பட்ட சோம்பேறிகள் ஓய்வையே உண்மையான இன்பம் என்று நம்புகின்றனர். இது தவறான எண்ணமாகும். சொல்லப்போனால், மனித இனத்திற்கு உழைப்பு ஒரு வரப்பிரசாதமாகும். நம்மிடம் உள்ள அதிகப்படியான சக்தி எந்த விதத்திலாவது செலவழிக்கப்படவேண்டும். அதை ஏதாவது ஒரு தொழிலில் செலவழித்தால், அது நமக்கும் நாட்டுக்கும் நல்லது.

வேலையிலுள்ள கட்டுப்பாட்டினால், சில மனிதர்கள் வேலையை வெறுப்பது நியாயமே. ஆனால், இந்தக் கட்டுப்பாடும், அந்த வேலையினால் கிடைக்கக்கூடிய அநேக பலன்களுள் ஒன்று என அறிந்தால் அவர்கள் அவ்வாறு வெறுக்கமாட்டார்கள். ஏனென்றால், கட்டுப்பாடு நம் உறுதியைப் பெருக்கி, குணத்தைச் சீரமைத்து ஆணாக இருந்தால் ஆண்மையையும், பெண்ணாக இருந்தால் பெண்மையையும் வளப்படுத்தும். கட்டுப்பாடற்ற மனிதனை, காடாக மாறிய சோலையாகவோ, சீற்றத்துடன் பாயும் வெள்ளமாகவோ கற்பனை செய்து கொள்ளலாம்.

கட்டுப்பாடு, ஒரு மனிதனது சக்தியைச் சரியான மார்க்கங்களில் செலுத்தி, முறையான வழியில் மற்றவர்களுடன் அனுசரித்துப் போவதற்கு வழிசெய்கிறது. அவனது சக்தியை, அது சமநிலைப்படுத்தி, ஆக்கபூர்வமாக மாற்றுகிறது. கட்டுப்பாடு, தனி மனிதனுக்கு மட்டுமன்றி, அவனைச் சார்ந்துள்ள ஓர் அமைப்பிற்கே உறுதி அளிக்கிறது.

வேறு சில மனிதர்களோ, பொறுப்புகளைத் தாங்குவதற்குத் தயங்குவதன் காரணமாக, வேலை செய்யவும் தயங்குகின்றனர். ஆனால், வேலையிலுள்ள பொறுப்பை வரவேற்கும் சிலர், பின்னர்

மனத்தை, குறிப்பாக வயதான காலத்தில், இளமையாகவும், உறுதியுடனும் வைத்துக்கொள்ள ஒரு சிறந்த வழி, எப்போதும் ஏதாவது ஒரு புதிய விஷயத்தைக் கற்றுக்கொண்டிருப்பதாகும். எந்த நிமிடத்தில் ஒரு மனிதன் கற்பதை நிறுத்துகிறானோ, அந்த நிமிடமே அவனது மனோவியாதியும் தொடங்கிவிடுகிறது. உள்ளத்திற்கும் உடலுக்கும் சம்பந்தம் இருப்பதால், கற்பதனால் ஏற்படும் மன உறுதியானது, உடலுக்கும் உறுதியையும் ஆரோக்கியத்தையும் அளிக்கிறது. இது வயோதிக காலத்துக்கும் பொருந்தும். எப்போதும், புதிய உலகங்கள் மனிதனால் ஆளப்படக் காத்துக் கொண்டிருப்பதால், கல்வியில் நாட்டம், அதன் அளவற்ற தன்மை ஆகியவை உடலுக்கு உறுதியையும் அளிக்கின்றன.

சமூகச் சேவையை எல்லாரும் குறிப்பாக வயோதிகர்கள், தங்கள் ஓய்வுப் பணியாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். சமூகத்திலுள்ள தீயவற்றை ஒழித்துக்கட்டுதல், மக்களின் துன்பங்களைப் போக்குதல், போன்ற இன்னும் எத்தனையோ பணிகளில் ஈடுபடும் சங்கங்களில் அங்கத்தினராகலாம். இளைஞர்களோ, சாலை அமைத்தல் போன்ற உடல் உழைப்பு தேவைப்படக்கூடிய – ஆனால், உபயோகமான – வேலைகளில் ஈடுபடலாம்.

எத்தனையோ பொதுப்பணிகள் காத்துக் கிடக்கின்றன. அவற்றை வாலிபர்களும் வயோதிகர்களும் அவரவர்க்குத் தக்கபடி தேர்ந்தெடுத்துப் பணியாற்றி, தங்கள் ஓய்வு நேரத்தை நல்ல முறையில் பயன்படுத்தலாம்.

ஆனால், ஓய்வு நேரப் பணிகளைப் பற்றிக் கூறும்போது ஓர் எச்சரிக்கையும் தரப்பட வேண்டும். இந்தப் பணிகள் ஒருவரின் முக்கிய வேலைக்கோ மற்ற சமூகப் பொறுப்புக்கோ பங்கம் வராத வகையில் அமைந்திருக்க வேண்டும்.

ஆனால், வாழ்க்கையில் எல்லாக் கஷ்டங்களையுமே பொழுதுபோக்கு அம்சமாகப் பாவித்து மகிழ்பவர்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களைக் காண்பது அபூர்வம்; ஆனால் அநேகர், தங்கள் பணிகளிலிருந்து விடுபட்டு ஓய்வுக் காலத்தை மகிழ்ச்சியுடன் செலவு செய்ய வேண்டும் என்றுதான் எண்ணுகிறார்கள்.

பொழுதுபோக்கு அம்சங்களிலும் நல்ல நண்பர்களுடனும் செலவிடுவதால், ஒரு பணக்காரருக்கு மட்டுமின்றி, ஒரு சாதாரணத் தொழிலாளிக்கும் சந்தோஷமும் திருப்தியும் ஏற்பட வாய்ப்பு உண்டு. ஏழைமையினால் கசப்புடன் வேலை புரிந்தாலும், ஓய்வு எல்லாருக்கும் நிம்மதியை அளித்து, இயந்திர வாழ்க்கையிலிருந்து ஒரு மாற்றத்தையும் அளிக்கும்.

ஓய்வுப் பணிகள்

முதிர்ச்சி பெற்ற ஓர் ஊழியர் தம் ஓய்வு நேரத்தை, காலத்தைப் போக்கிக் கலகலப்பை ஏற்படுத்தும் விளையாட்டுகளில் வீணடித்துக் கொண்டிருக்க மாட்டார். மாறாக, அவர் தம் ஓய்வு நேரத்தைச் சிறந்த முறையில் செலவழிக்கத் திட்டம் ஒன்றைத் தயாரித்துக் கொள்ளுவார். அவர் திட்டமிடும் ஓய்வுப் பணிகள் அவர் உடலையும், உள்ளத்தையும் வாட்டாமல் உற்சாகமளித்து, ஊக்குவிக்கும் விதத்தில் அமையும். நாம் தேர்ந்தெடுத்துக் கொள்ளக் கணக்கிலடங்காத ஓய்வுப் பணிகள் உள்ளன. அவை நம் சிருஷ்டி உணர்ச்சியைப் (Creative Instinct) பதப்படுத்தி, ஞானத்தை வளர்த்து, நம்மை மனிதன் என்ற நிலைக்கு எடுத்துச் செல்கின்றன. பொழுதுபோக்கு அமிசங்கள், பெயருக்குத் தக்கவாறு பொழுதுபோக்குவதுடன் நில்லாமல் ஆக்கத்துடன் இருக்கவேண்டும்; மன மகிழ்வுக்கு மட்டுமன்றி, கலை உணர்ச்சிக்கும் அதில் இடமிருக்க வேண்டும். விளையாட்டுகள், மன்றங்கள் (Clubs) போன்ற சமூக சம்பந்தப்பட்டவை மட்டுமன்றி, படிப்பு, ஓவியம், சிற்பம், புகைப்படக்கலை, கலைப்பொருள்கள் சேகரித்தல் ஆகிய தனிமனிதப் பணிகளாகவும் இருக்கலாம். இப்படித் தமக்குப் பிடித்த விதத்தில் ஓய்வு நேரத்தை ஒருவர் செலவிடுவதால், அவரது மனம், அச்சமயத்தில் அவர் எந்த நிலையில் இருந்தாலும் கிளர்ச்சியடைகிறது.

இந்த இடத்தில், சிறு வயதில் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துவதற்கும் வயதான காலத்தில் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துவதற்கும் உள்ள வித்தியாசங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

திறமையும் ஆர்வமும்

இனி, கஷ்டப்பட்டு முன்னேறுவதில் உள்ள ஆர்வமானது எவ்வாறு திறமைக்கு வழிகாட்டுகிறது எனப் பார்ப்போம்.

மனிதகுலம் உழைப்பின்றி நிமிர்ந்து நிற்கமுடியாது. வேலையால் மட்டுமே, எந்த மனிதனும் தனது குறிக்கோளை அடையமுடியும். ஆகவே, எப்படிப்பட்ட காரியமாயினும் சரி, திறமையின் முதல் அடிப்படை, அந்தக் காரியத்தில் ஆர்வங்கொள்வதாகும். வேலையைச் செய்வதில் மகிழ்ச்சிகொள்ளவேண்டும். ஆர்வமே திறமை, வெற்றி, மகிழ்ச்சி ஆகியவற்றின் மூலதனம். அது ஒருவரின் சிதறிக்கிடக்கும் திறமைகளை ஒன்று சேர்க்கிறது. வேலையிலுள்ள கடினத்தையும் சோர்வையும் போக்கி, ஒரு மந்தமான வேலையைக்கூட உற்சாகமான பணியாக மாற்றவல்லது. ஆர்வம் இல்லாவிடில் வேலையில் வெறுப்பு ஏற்பட்டுத் தொய்வு ஏற்படுகிறது. செய்யப்படும் காரியம் சிறக்காமல் போய்விடுகிறது.

நவீன விஞ்ஞானமானது நீராவி, மின்சாரம், இயந்திரம் ஆகியவற்றை நமக்கு அளித்திருப்பதனால் மனிதனின் உழைப்பு அநேகத் துறைகளில் தேவையற்ற ஒன்றாகிவிட்டது. இருப்பினும் அவன் களிப்பற்ற மனத்துக்கு ஒவ்வாத பல வேலைகளைச் செய்யும் நிலைமை இன்னும் இருக்கத்தான் செய்கிறது. அவன் தனது வேலையை மதித்து ஆர்வம் கொள்கிறான் என்றால், அது எதிர்காலத்தில் நல்ல நிலைமையை அடைவதற்காகவாகும். தனது வேலையில் களிப்படைவது, மலருக்கும் பழங்களுக்கும் சூரிய ஒளி எவ்வளவு தேவையோ, அவ்வளவு தேவையாகும்.

ஆர்வத்தை, ஓர் இயந்திரத்தை இயக்கும் மின்சாரத்துடன் ஒப்பிடலாம். இந்தச் சக்தி – அதாவது ஆர்வம் இல்லாவிடில், மனித உடல், உள்ளம் ஆகிய இயந்திரங்கள் சரிவர இயங்காமல் சோர்வடைகின்றன. கவனிப்புத் தன்மை (Concentration) ஞாபக சக்தி, சிந்தனைத் திறன் (Thinking Power) ஆகியவற்றிற்கு இந்தச்சக்தி துணை புரிகிறது. ஆர்வங்கொள்வதனால், ஒரு காரியத்தில் தேவைக்குக் குறைந்த கஷ்டமே தேவைப்படுகிறது.

நடந்துகொள்வதும் பலனைத் தரும். நம் உணர்ச்சியும் ஆக்கமும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவை. நம் வேலையின் மூலம் நம் உணர்ச்சியையும் நாம் கட்டுப்படுத்த முடியும். காரணம், நமது உணர்ச்சி நம் ஆர்வத்திற்குக் கட்டுப்படாது. ஆனால், நம் செயல்களே ஆர்வத்திற்குக் கட்டுப்படும். சுருக்கமாகக் கூற வேண்டுமென்றால், ஆர்வமற்ற இடத்தில் ஆர்வத்தை உண்டாக்கிக்கொள்வது எளிது. வேலையில் அக்கறையே இல்லாவிடினும், இருப்பது போன்ற மனப்பாங்கை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். மகிழ்ச்சியே இல்லாமல் உட்கார்ந்திருந்தாலும் மிக மகிழ்ச்சியாக இருப்பது போல் மற்றவர் கண்களுக்குத் தோற்றமளிக்க முயற்சி செய்யுங்கள். நிச்சயம் மகிழ்ச்சி அடைவீர்கள் – உண்மையிலேயே.

3. எந்த வேலையுமே ஆரம்பத்தில் கவர்ச்சியற்று இருப்பதோடு சோதனையாகவும் இருக்கும். ஆனால், போகப்போக ஆர்வம் ஏற்படும். காரணம், திறமையும் தேர்ச்சியும் ஒரு வேலையில் ஈடுபாடு அதிகமானவுடன் தான் பெருகும். முதலில் கடினமாக உழைத்தால், பிற்காலத்தில் நல்ல பலன் கிட்டும். ஏனென்றால், திறமையும் ஆர்வமும் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டவை. ஒன்று எவ்வளவு நிறைந்திருக்கிறதோ, மற்றதும் அவ்வளவு இருக்கும்; ஒன்று இல்லாத இடத்தில் மற்றது இருக்காது.

அருவருக்கத்தக்க பொருளின்மீது சக்தி வாய்ந்த ஒளியைப் பாய்ச்சினால் அது கவர்ச்சிகரமான பொருளாகத் தோன்றுவதுபோல, எந்த வெறுப்பான வேலையின்மீதும் உங்கள் ஆர்வம் என்னும் ஒளியைப் பாய்ச்சி ஈடுபாடு கொண்டால், நாளடைவில் உண்மையாகவே உங்களுக்குப் பற்று ஏற்பட்டுவிடும்.

இந்த மூன்று வழிகள் இல்லாமல், இவற்றை ஆதாரமாகக்கொண்டோ, இன்னும் பல புதிய முறைகளிலோ நீங்களே சிந்தித்து, உங்கள் மன நிலைக்கு ஏற்றவாறு உங்கள் வேலையிலுள்ள ஆர்வத்தைப் பெருக்குவதில் தவறில்லை.

வேலையை ஒரு சாபமாக மதிப்பவர்கள் அன்றி இன்னோர் ஆர்வமற்ற வகுப்பினர் எப்போதும் ஏதாவது பாராட்டுதல்களையும்,

என நம்புவதோடு இயந்திரங்களையே மனித நாகரிகத்தின் அடையாளம் என நம்புகின்றனர். மனோதத்துவத்தின் அடிப்படையில், அதிகத் திறமை உள்ள இடத்தில் நேரமும் உழைப்பும் மிச்சந்தானே ? ஆகவே, இயந்திரங்களைப் பாராட்டுவதில் என்ன தவறு என்று வாதிப்பார்கள். இவர்களின் இந்த நம்பிக்கை, மனிதனின் கைக்கும் மூளைக்கும் உள்ள வேலையின் மதிப்பைக் குறைத்து மதிப்பிடுகிறது. உதாரணமாக, கம்ப்யூட்டர் எனப்படும் கணக்கிடும் இயந்திரமும் Robot எனக் கூறப்படும் 'மாதிரி மனித இயந்திரமும்,' இன்னும் சிறிது காலத்தில் எந்த மனிதனுக்கும் வேலையில்லாமல் செய்யக்கூடிய நிலைமையை உருவாக்கிவிடும்.

Ê " ஞானமும் இயந்திர நுணுக்கங்களும், மனிதனை நிரந்தர ஓய்வுக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று எதிர்பார்த்து, மாறாக, வேலையிலுள்ள மந்த நிலையைப் போக்கி அவனை மேன்மேலும் உழைப்பில் ஈடுபடச் செய்யவே உதவி புரிகின்றன என்பதுதான் உண்மையாகும்.

விஞ்ஞானத்தின் பரிசாகிய ஓய்வு, மனிதனின் ஊக்கத்தைப் பெருக்குவதற்காக உள்ளதேயன்றி, அவனை முழுச் சோம்பேறியாக ஆக்குவதற்காகவன்று என்பதை அனைவரும் உணரவேண்டும்.

ஆர்வம் பெறும் வழிகள்

ஒருவருக்கு ஆர்வத்தை ஏற்படுத்த மூன்று வழிகள் உள்ளன:

1. நல்ல தன்மைகளையே சிந்திக்கும் Optimist – ஆக இருங்கள். உங்கள் வேலையிலுள்ள சிறந்த தன்மைகளையே சிந்தியுங்கள். அதனால் ஏற்படக்கூடிய பலன்களைத் தேடுங்கள். உங்கள் நன்மைக்காகவும், சமூகத்தின் நலனுக்காகவும் அதிலுள்ள அமிசங்களை ஆராயுங்கள். இப்படிப்பட்ட வேலையில் நீங்கள் ஈடுபடுவதன் மூலம் உள்ள இலாபத்தைக் கணக்கிடுங்கள். நல்ல தீர்க்கதரிசனமானது சக்திக்கும் வெற்றிக்கும் உதவுகிறது.

2. உங்கள் உத்தியோகத்தில் உண்மையாகவே உங்களுக்கு ஆர்வமில்லாவிடினும், வெளிப்பார்வைக்கு ஆர்வமுள்ளவராக

ஆர்வமானது ஒரு துறையில் மூலாதாரமாக இருந்து, இயக்கும் திறனை ஒருவருக்கு அளிக்கிறது. நல்ல ஈடுபாட்டுடன் கூடிய ஆர்வமானது, எல்லாச் சிக்கல்களையும் நுணுக்கங்களையும் சிந்தித்து அறிந்து கொள்ள உதவுகிறது. எல்லாவற்றையும்விட, ஆர்வமே மனிதனின் உற்பத்தித்திறனுக்கு ஒரு சிறந்த திறவுகோலாகும். எந்தத் துறையிலும் தேர்ச்சி பெறவேண்டுமென்று விரும்பினாலோ, அந்த வேலையை இன்னும் எளிதாகச் சிறந்த முறையில் கையாள நினைத்தாலோ, நேரம், உழைப்பு ஆகியவற்றை மிச்சப்படுத்தும் முறைகளை ஆராய நினைத்தாலோ, தன் சொந்தக் கருத்தைக் கொண்டு புதிய உபாயங்களைப் புகுத்த நினைத்தாலோ, உங்களுக்குத் தேவைப்படும் அறிவுரை இதுதான்; உங்கள் வேலையை நேசித்து, ஈடுபாடுகொள்ளுங்கள்; அதற்குத் தேவையான நேரத்தையும் சிந்தனையையும் ஒதுக்குங்கள்.

வேலையில் ஆர்வமுள்ள ஒருவர், தம் சக தொழிலாளிகளையோ, அதிகாரியையோ, உதவியாளர்களையோ வேலை செய்யும் சூழ்நிலையையோ, வெறுக்கமாட்டார். அப்படி அவர் வெறுப்புக்கொண்டால், வேலையிலிருந்து அவரால் களிப்பைப் பெற முடியாது. வாழ்க்கையில் மகிழ்ச்சியும் நிம்மதியும் அடைய வேண்டுமென்று நினைத்தால், நம் விருப்பு வெறுப்புகளைத் தக்கவிதத்தில் பதப்படுத்தி, திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஏதாவது ஒன்றன்மீது குறை கூறிக்கொண்டே இருப்பவர்களால், திறமை என்னும் பெட்ரோலை இட்டு, மனம் என்னும் காரைச் செலுத்த இயலாது.

இயக்கி வெற்றிபெற முடியாது.

சோம்பேறித்தனம் ஒரு வியாதி

இந்த நவீன யுகத்தில், உழைப்பை ஒரு சாபமாக நினைக்கும் வாய்ப்புகள் நிறைய உள்ளன. காரணம், மனிதனின் விஞ்ஞான அறிவானது பல புதுப் புது இயந்திரங்களைக் கண்டுபிடித்துக் கொண்டே இருக்கிறது. சிலர், விஞ்ஞானிகளை மனித தெய்வங்கள்

பதவி உயர்வையும், அதிகப் பணத்தையும் எதிர்பார்த்துக்கொண்டே வேலை செய்வார்கள். இப்படிப்பட்டவர்களும் தேர்ந்த அறிவு பெறாதவர்கள் என்றே கூறலாம். காரணம், நாம் செய்த வேலையில் குற்றம் குறை கூறுபவர்கள்தாம் நம்மைச் சுற்றி இருப்பார்களேயன்றி, பாராட்டுபவர் வெகு சிலரே இருப்பார்கள். சிலருக்குப் பாராட்டுகள் மலைபோல் குவிவதை மறுக்க முடியாது. ஆனால், பாராட்டுதலையும் பணத்தையும் உழைப்பிற்கு நிபந்தனையாகக் கொண்டால், இறுதியில் தோல்வியும் மகிழ்ச்சியின்மையும் நம்மை வந்துசேரும்.

ஆனால், பொருளுக்கு மதிப்பு பெருகிவிட்ட இந்நாளில், எந்த ஒரு மனிதனும் பணத்தை வெறுத்து ஒதுக்குவான் என்று எதிர்பார்க்க இயலாது. ஆனால், பணத்தையே முக்கியமான குறிக்கோளாகக் கொள்ளுவது தவறாகும். பணமும் ஆதரவும் மட்டுமன்றி, ஒரு வேலையில் மனிதனை வெற்றிகரமாக ஈடுபடச் செய்வது அவனுக்குள் ஏற்படும் திருப்திதான். பணத்திற்காக மட்டும் ஒரு செயலைச் செய்வதாக எண்ணாமல், கடமை உணர்வோடு தனது பங்கைச் செலுத்துவதாக எண்ணினால் அம்மனிதன் வெற்றி பெறுவது நிச்சயம். இப்படிப்பட்ட மனப்பான்மையின் மூலம் ஏற்படும் திருப்தியானது, பணத்தாலோ பாராட்டினாலோ ஏற்படும் திருப்தியைவிட எவ்வளவோ மேலானது. தூய்மையானதுங்கூட!

பொருளை நாடும் இந்த நவீன யுகத்தைப் போலன்றி, பழங்காலத்தில், மக்கள் ஒரு செயலைச் செயலுக்காகவே செய்வார்கள்; கடவுளுக்காகச் செய்வார்கள்.

கீதை கூறுகிறது:

"கர்மத்தில் ஈடுபடு, பலனை எதிர்பார்க்காதே, பலனை நோக்கமாகக்கொண்டு, காரியத்தைச் செய்யாமல் இருந்துவிடாதே."

"கடவுளிடம் ஈடுபாட்டுடன் பணியைச் செய். தோல்வியையும் வெற்றியையும் சமமாகப் பாவித்து பந்தங்களை எறி; 'சமநிலை'யே யோகம் என்று கூறப்படுகிறது."

"எவன் ஒருவன் பலனை எதிர்பாராமல் கடமையைச் செய்கிறானோ, அவனே முனிவன்; அவனே யோகி – இதற்கு எதிர்மாறானவனிடம் ஏற்றங்களை எதிர்பார்க்கமுடியாது."

மகிழ்ச்சியும் செயலும்

ஆர்வம் பெயரளவில் இருந்துவிட்டால் போதாது. மாறாக, இந்த ஆர்வத்தைச் செயலாக மாற்ற ஒவ்வொரு மனிதனும் முயற்சி செய்யவேண்டும். இதற்கு ஒரே வழி நீங்கள் செய்யும் வேலையில், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணியும் மகிழ்ச்சியுடன் ஈடுபடுவதேயாகும். அத்துடன் உங்கள் சிந்தனைத் திறனையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். உங்கள் வேலையினால் ஏற்படும் பொருள் இலாபம் மட்டுமன்றி உங்களுக்குப் பொதுவாக ஏற்பட இருக்கும் சௌகரியம் சுகாதார நலன், மற்ற நலன்கள் குறித்தும் எண்ண வேண்டும்.

இலட்சியத்துடன் செயலில் இறங்கும்போது வெறுப்போ மந்தமோ ஏற்படாது. வேலையிலுள்ள ஆர்வத்தை என்றும் குறையாத மகிழ்ச்சியின் முன்னோடியாக நினைத்து வளர்த்துக் கொள்ளவேண்டும். இங்கே ஒன்றைக் கருத்தில் கொள்வது நலம். வேலையில் ஏற்படும் மகிழ்வானது மற்ற சந்தோஷமான விஷயங்களைவிட முழுமையான ஒன்றாகும். மற்ற விதத்தில் வரும் இன்பங்கள் அவசியமற்றவை.

மகிழ்ச்சியும் ஆர்வமும் இணையும்போது உளக்கம் பிறந்துவிடும். மனத்திலுள்ள உயர்ந்த ஆசைகளை அப்படியே ஊறுகாய் போடாமல், செயலாக்கிக் காட்டுவதற்கு உளக்கம் மிக அவசியம். உளக்கம் என்ற கனி, பழுக்கும்போது தான் முழு உருவம் அடைகிறது. உளக்கம் என்னும் நெருப்பில் உண்டாகும் நீராவிதான் இடைஞ்சல்களைக் கடந்து, செயல்களை முடித்து, வெற்றிப் பாதையை நிறைவேற்றுகிறது.

உளக்கம், திடமான மனத்தை அளிக்க வல்லது. உளக்கம் மட்டும் இல்லாவிடில், சிறிய எதிர்ப்போ இடர்ப்பாடோ ஏற்பட்டால்கூட, மனிதன் பின்வாங்கிவிடுவான். மாறாக, அவன் பின்வாங்காமல் இன்னும் சற்று உறுதியுடன் இருந்திருந்தால், வெற்றி அவனருகில் இருப்பதை உணர்வான். உளக்கம் என்பது ஒரு தொற்று வியாதி. அதாவது உளக்கமுள்ள ஒருவனால் மற்றவர்களுக்கும் நம்பிக்கை அளித்து முன்னேற்றமடைய வழி செய்ய முடியும்.

நீங்கள் உயர்ந்த உளக்கமுள்ள ஓர் அதிகாரியாக இருந்தால் அதிகாரம் செலுத்துவதுடன் நின்றுவிடக் கூடாது. மற்றவர்களுக்குத்

"நீ எதைச் செய்தாலும், எதைப் பரிசாக அளித்தாலும், எதைச் சிக்கனப்படுத்தினாலும், அதை நீ எனக்காகச் செய்."

"இப்படியெல்லாம் செய்வதன் மூலம், வெற்றி தோல்வி ஆகிய பந்தங்களிலிருந்து உன்னை நீயே விடுவித்துக் கொள்ளுவாய்."

இந்தப் புத்திமதிகள் எல்லாம் ஏதோ எட்ட முடியாத தத்துவங்கள் என்று எண்ணிவிடவேண்டா. இவை நடைமுறை வாழ்க்கைக்குப் பொருந்தியவை. வேறெந்தவிதமான தடங்கல்களோ, மற்ற கவனத்தை ஈர்க்கும் தொந்தரவுகளோ இல்லாவிட்டால்தான், மனித அறிவானது வெற்றிகரமாக இயங்கும். வெற்றிக்காக ஏற்படும் சலனம்; மற்றவர்களின் பாராட்டைப் பெற விழையும் துடிப்பு; சொந்த நலத்திற்காக இல்லாவிடினும் வெறியினால் ஏற்படும் போட்டி மனப்பான்மை ஆகிய குணங்கள் அறிவின் சமநிலையைப் பாதிக்கின்றன. அதோடு வெற்றியையும் கெடுக்கின்றன. இது எதிர்பார்க்கக்கூடியதே. காரணம், மனத்தின் கவனமானது, முடிவின் மீதுள்ள நப்பாசைக்கும் வேலையின் மேலுள்ள அக்கறைக் குறைவுக்கும் மத்தியில் பிளவுபட்டுப் போவதேயாகும்.

சிலர் நல்ல முறையில் வேலை செய்யாததற்குப் பல சப்பைக் கட்டுகள் கட்டுவார்கள். உதாரணமாக, சிலர் முதலாளிகளின் முரட்டுத் தன்மைகளை எண்ணிக் கொண்டிருப்பார்கள். எவ்வளவு கஷ்டப்பட்டாலும் பாராட்டாமல் இருக்கிறார்களே என்று வருத்தப்படுவார்கள். முதலாளிகள் சொந்த நலத்தைப்பற்றியே அக்கறை கொண்டுள்ளார்கள்; நம்மை கவனிப்பதே இல்லை என்று மனம் புழுங்குவார்கள். முதலாளி ஒரு கஞ்சன் என்று பலவிதமாகக் கணக்கிட்டுக் கொண்டிருப்பார்கள். அதாவது, வேலையை ஒழுங்காகச் செய்வதைத் தவிர, மற்ற எல்லாவற்றையும் செய்வார்கள். ஆனால், இப்படிப்பட்டவர்கள் கவனிக்க வேண்டியது என்னவென்றால், இவர்கள் செய்யும் வேலையானது இவர்களின் குணம், திறமை ஆகியவற்றின் வெளிப்பாடே தவிர, மற்றவர் குணம், நடத்தை ஆகியவற்றின் எதிர் நடவடிக்கை இல்லை என்பதேயாகும். பலனை எதிர்பார்க்காமல் பணியாற்றுங்கள். பலனாகப் புகழும் பணமும் தாமாக வந்து குவியும்.

இதை விஞ்ஞான ரீதியிலும் கூறலாம். தனது உடலின் வெப்ப நிலையை, சூழ்நிலைக்குத் தக்கவாறு, ஒவ்வொருவரும் கட்டுப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். வெளிப்புறத்திலுள்ள வெப்பமோ குளிரோ உடலைப் பாதித்துவிடாமல் இருக்க, உடலின் உள்ளே பலவிதமான எதிர்ச்செயல்கள் நடைபெறுகின்றன. ஒரு மனிதன் மிகவும் உஷ்ணமான நிலையில் இருந்தால் அவன் சோர்ந்து போய்விடுகிறான். குறைந்த மெல்லிய ஆடைகளையே அணிய விரும்புகிறான். குளிர்பானங்களை மட்டுமே குடிக்கிறான். அவனே, மிகக் குளிர்ந்த நிலையில் காணப்பட்டால், கடினமான ஆடைகளை உடுத்துகிறான். செயற்கை முறையில் உஷ்ணத்தை உண்டாக்கிக் கொள்கிறான். சூடானவற்றையே உட்கொள்ளுகிறான்.

ஒரு மெக்கானிக் வெப்பமிகுந்த ஓர் இரும்புக் கம்பியைத் தொட்டுவிட்டால், உடனே தம் கையை இழுத்துக் கொள்ளுகிறார். காரணம், வெப்பம் அவர் விரல்களைத் தாக்கிக் கொப்புளத்தை உண்டாக்க முயல்கிறது. இவ்வித அனுசரிப்புகளுக்கு அனுபவமும் தேவை. உதாரணமாக, ஒரு குழந்தை ஏதாவது பாதிப்பு ஏற்பட்டால் அழுகிறது. ஆனால், அது இம்மாதிரி மாற்று முறைகளைக் கையாள்வதில்லை. வயதும், முதிர்ந்த அறிவுந்தான், ஏற்படும் கஷ்டங்களுக்கு மாற்றுத் தேடும் முயற்சியில் ஈடுபட வைக்கிறது.

இவ்விதமாக, ஒவ்வொரு மனிதனும் உடலின் வெளிப்புறத்தில் ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்த்துக் கொள்கிறான். அல்லது எதிர்காலத்திலும் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்கிறான்.

நம் கண்களை எடுத்துக் கொள்வோம். நாம் படிக்கும்போது, நம் கண்கள் குதித்துக் குதித்து முன்னேறுவதாகக் கண்டுபிடித்துள்ளனர். நாம் குறிப்பிட்ட இடத்தைப் பார்க்கும்போது, குறிப்பாக ஒரு வரியைப் படிக்கும்போது ஒரே நேரத்தில் நம்மால் ஓர் அங்குல நீளமோ ஒன்றரை அங்குல நீளமோதான் காண முடியுமாம். இந்த இடத்தைப் படித்து முடிக்கும்வரை நம் கண்கள் சிறிது நிற்கின்றன. அடுத்த இடத்திற்குப் போகும்போது மெல்லிய ஆனால், விரைவான இயக்கம் உண்டாகி நமது கண்கள் அங்கே நோக்குகின்றன. நல்ல படிப்பாளிகள் ஒரு வரியில் இம்மாதிரி அதிகபட்சம்

தேவையான நம்பிக்கை, பலம், ஆர்வம் ஆகியவற்றை உங்களால் நிச்சயம் தர முடியும்.

மனிதனுக்குள் புதைந்து கிடக்கும் ஆக்க சக்தியை ஊக்கந்தான் வெளிக்கொணருகிறது. காரியங்களை முடித்துக் காட்ட வேண்டிய பொறுப்பிலுள்ள அதிகாரிகளிடம், ஊக்கம் ஓர் 'ஓட்டி' (Driving force)யாக இருந்து செயல்படுகிறது. நீங்கள் ஊக்கத்துடன் இருந்தால்தான், உங்களுக்குக் கீழ் உள்ள எல்லாரும் ஊக்கத்துடன் இருப்பார்கள். உங்களின் கீழ் பணிபுரிபவர்களிடம் சிறப்பான சாதனைகளை எதிர்பார்க்கும் நீங்கள், உங்களை ஒரு செயல்வீரர் என்பதாக நிரூபிக்க வேண்டும். நீங்கள் ஓர் உண்மையான சேவைமனப்பான்மையுடன் (Missionary Zeal) இருப்பதாக ஊழியர்கள் நினைத்தால்தான், அவர்களும் ஆர்வத்துடனும் அக்கறையுடனும் பிறகு பார்த்துக் கொளள்லாம் என்று தள்ளிப்போடும் மனப்பான்மை இல்லாமலும் பணி புரிவார்கள். வயதானவர்களும் ஊக்க மனப்பான்மையுடன் இருந்தால், இளமையுடனும் உற்சாகத்துடனும் இருப்பார்கள். காரணம், ஊக்கத்திற்கும் இளமைக்கும் நிறைய சம்பந்தம் இருக்கிறது. ஆகவே –

ஒவ்வொரு மனிதனும், வயதாகிவிட்ட போதிலும் ஊக்கம் குன்றாமல் இருக்க வேண்டும். செயலிலேயே கருத்தாக இருக்க வேண்டும்.

திறமையின் வேறொரு வடிவம்

நான் ஏற்கெனவே கூறியபடி திறமை என்பது இயற்கையாகவே ஒருவருக்கு அமைய வேண்டும் என்பது அவசியமில்லை. வேறொருவரின் பிரதிபலிப்பாகவோ பயிற்சியின் அடிப்படையாகவோ ஒருவர் திறமையைப் பெற முடியும். திறமையைப் பயில்வதற்குள்ள ஒரு முறைதான், ஒத்துப்போதல் (Adjustment) ஆகும். அதாவது, மனிதன் எத்தனை சந்தர்ப்பங்களில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது என்பதைப் பார்ப்போம்.

முதலில் தான் இருக்கும் சூழ்நிலையுடன் ஒருவன் ஒத்துப்போகாவிடில், அவனால் திறமையாகச் செயல்பட முடியுமா?

இரண்டு அல்லது மூன்று முறை கண்களை இயக்குகின்றனர். ஆனால், படித்துப் பழக்கப்படாதவர்களோ, தங்கள் கண்களைத் தேவைக்கும் அதிகமாகத் துன்புறுத்துகின்றனர். சிலர், முதல்முறை படிக்கும்போதே சரியாகப் படிக்காமல், ஒரு சொல்லையோ வரியையோ மீண்டும் பார்ப்பதற்காக விழிகளைப் பின்னோக்கித் திருப்புகின்றனர்.

இவ்விதமாகக் கண்களைச் சரியாக இயக்குவதன் மூலம் அநேகக் கஷ்டங்கள் தவிர்க்கப்பட்டு, நமது சக்தியும் மிச்சமாகின்றன.

இம்மாதிரி அனுசரித்துப் போகும் முறைகள் இன்னும் ஏராளமாக இருக்கின்றன. உதாரணமாக, சாலையில் ஒரு வாகனத்தைப் போக்குவரத்து இடைஞ்சல்களுக்கு இடையே ஓட்டிச் செல்லுதல்; ஒரு சிக்கலான பிரச்சினைக்குத் தீர்வு காணுதல்; மனோதத்துவ ரீதியில் மற்றவர்களின் உணர்ச்சிகளால் பாதிக்கப்படாமல் இருத்தல்; வெற்றிகள் கிட்டாத நிலைகளை எவ்வாறு ஏற்பது ஆகிய பலவிதமான அனுசரணைகள் இருக்கின்றன.

ஆகவே –

அனுசரணை என்பது, திறமையின் வேறொரு வடிவமே. சிலர் அதை அனுபவத்தின் மூலமும் சிலர் இயற்கையாகவும் பெற்றிருக்கின்றனர்.

ஞாபகசக்தியும் திறமையும்

ஞாபகசக்தி நிரம்பப் பெற்றவர்கள் அநேகமாகத் திறமைசாலிகளாகவே இருப்பார்கள். நாம் எத்தனையோ விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்கிறோம்.

நாம் நினைவில் நிறுத்தும் ஒவ்வொரு விஷயமும் வித்தியாசப் பட்டிருப்பினும், மனோதத்துவப்படி அவற்றில் ஓர் ஒற்றுமை இருக்கிறது. அதாவது, நம் தற்கால அனுபவங்களானவை. இறந்தகால நிகழ்ச்சிகள் மீது ஆதாரப்பட்டு இருப்பவை. ஆகவே, ஞாபகசக்தி என்பது இறந்தகால விவரங்களின் 'நிகழ்கால' அறிவேயாகும். இதையே ஞாபக சக்தியின் அடிப்படைக் கருத்தாகக் கொள்ளலாம்.